

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கைலாசநாதர் கோவில் சித்திரை திருத்தேர் 2ம் நாள் சிவனடியார்கள் கைலாய மேளம் வாசிக்க ஏராளமான பக்தர்கள் பெரிய கடைவீதியில் இருந்து கச்சேரி வீதி வழியாக பழைய பேருந்து நிலையம் வரை வடம் பிடித்து இழுத்து சென்றனர். இதில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தேர்தல் பணியின் போது இறந்த ஜெயபாலன் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.15,00,000 க்கான காசோலை

## கலெக்டர் மருத்துர் ச.உமா வழங்கினார்



**நாமக்கல்,ஏப்.25-**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வேலவன் நகர், காட்டூர், காட்டுக் கொட்டாய் பகுதியில் (24.04.2024) தேர்தல் பணியின் போது இறந்ததற்கு ஜெயபாலன் வாரிசுதாரர்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவித்தபடி, கருணைத் தொகையாக ரூ.15,00,000 க்கான காசோலையை நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மருத்துவர் ச.உமா வழங்கினார்.

பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2024, 19.04.2024 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு 16.நாமக்கல் பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 93. சேந்தமங்கலம் (எஸ்.டி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் பணியாற்றியிருக்க வேண்டிய வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு 07.04.2024 அன்று சேந்தமங்கலம் வட்டம், அக்கியம்பட்டி கிராமத்தில் உள்ள வேதலோக வித்யாலயா மெட்ரிக்குலேசன் பள்ளியில் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்றது. மேற்கண்ட பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு வீடு திரும்பும் வழியில் அண்ணா நகர் பிரிவு சாலை, வேட்டம்பாடி இடத்தில் நடைபெற்ற சாலை விபத்தில் முதுகலை ஆசிரியர் மா.ஜெயபாலன் (வயது 53) என்பவர் இறந்து விட்டார்.

மா.ஜெயபாலன் அவர்கள் முதுகலை பட்டதாரி ஆசிரியராக வெண்ணந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றிய போது நல்லாசிரியர் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி, சாலை விபத்தில் இறந்த மா.ஜெயபாலன் (வயது 53) அவரது குடும்பத்தினருக்கு கருணைத்தொகையாக ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம்) வழங்கிட தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அதன் அடிப்படையில் இராசிபுரம் வட்டம், இராசிபுரம் நகராட்சி, கதவு எண் 22, வேலவன் நகர், காட்டூர் காட்டுக்கொட்டாய் என்ற முகவரியில் தேர்தல் பணியின் போது இறந்ததற்கு ஜெயபாலன் (லேட்) வாரிசுதாரர்களாகிய மனைவி மகேஸ்வரி, மகள் ஜெ.தாரணா, மகன் ஜெ.ஹிதேஷ்பாலாஜி, தந்தை மாதையன், தாய் உண்ணாமலை, ஆகிய 5 நபர்களுக்கும் நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் மருத்துவர் ச.உமா (24.04.2024) நேரடியாக அவர்களது இல்லத்திற்கு சென்று தேர்தல் ஆணையம் அறிவித்தபடி, கருணைத் தொகையாக ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம்) க்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ச.பிரபாகரன் (சேந்தமங்கலம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) ந.சிவக்குமார், முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமருகல் வட்டாரத்தில் பருத்தி சாகுபடி விவசாயிகள் அதிகம் மகசூல் பெற வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை

**நாகப்பட்டினம்,ஏப்.25-**

திருமருகல் வட்டாரத்தில் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதிகம் மகசூல் பெற வேளாண்மை உதவி இயக்குனர் தகவல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருமருகல் வேளாண்மை உதவி இயக்குனர் புஷ்கலா விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:- நாகை மாவட்டம் திருமருகல் வட்டாரத்தில் திருமருகல்,ஆலத்தூர், சியாத்தமங்கை, தென்பிடாகை,போலகம் அம்பல், பொறக்குடி, திருப்புகலூர்,மருங்கூர், எரவாஞ்சேரி,விற்குடி,வாழ்குடி, பில்லாளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி பணிகளை செய்து வருகின்றனர்.பண பயிரான பருத்தி சாகுபடியில் விவசாயிகள் மகசூல் அதிகம் பெற கீழ்காணும் முறைகளை கையாள வேண்டும். தழைச்சத்து உரங்கள் அதிகமாக இடுவதால் பருத்தி செடிகள் தேவைக்கு அதிகமாக உயரமாக வளர்ந்து விடுகிறது.இதனால் செடிகளில் அதிக பூச்சி வருவதுடன் நோய்களின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இச்சந்தர்ப்பங்களில் நுனி கிள்ளுதல் அவசியமாகிறது.

இவ்வாறு செய்வதால் பக்கக் கிளைகள் உருவாகி பூக்களும்,காய்களும் அதிக எண்ணிக்கையில் உண்டாகி காய்கள் உரிய காலத்தில் வெடிக்க உதவுகிறது. இரகங்களுக்கு 75 முதல் 80 நாட்களில் 15 வது கணுவிலும்,

ஒட்டு இரகங்களுக்கு 85 முதல் 90 நாட்களில் 20 வது கணுவிலும் தண்டின் நுனியை சுமார் 10 செ.மீ அளவுக்கு கிள்ளி விடவேண்டும். இதன் மூலம் காய்கள் திரட்சியாகவும், பருமானகவும் வர 2 சதவீதம் டி.ஏ.பி கரைசலை 45 மற்றும் 75 நாட்களில் தெளிக்க வேண்டும்.இதன் மூலம் மகசூல் அதிகம் கிடைக்கும் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கிருஷ்ணகிரி பூவத்தி கிராமத்தில் கனகதுர்காதேவி திருக்கோவில் மழை வேண்டி சுதர்ஷன யாகம்



**கிருஷ்ணகிரி,ஏப்.25-**

கிருஷ்ணகிரி அருகே உள்ள கெங்கலேரி கிராமத்தை பூர்வீகமாக கொண்டுள்ள மக்கள் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இடம் பெயர்ந்து வசித்து வருகின்றனர். இவர்களில் முன்னோர்கள் வழிப்பட்டு வந்த ஸ்ரீ கனகதுர்கா தேவி பூவத்தி கிராமத்தில் உள்ளது, சிறிய அளவில் காணப்படும் இந்த திருக்கோவிலில் ஆண்டுதோறும் நவராத்திரி பூஜைகள், துர்கா அஷ்டமி உள்ளிட்ட பல்வேறுப் பூஜைகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு வெயிலின் தாக்கம் அதிகரித்த வண்ணம் இருப்பதால் மழை இன்றி நீர்நிலைகள் வறண்டுக் காணப்படுவதால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெயிலின் கோரப் பிடியில் இருந்து மக்கள் விடுபட வேண்டி ஸ்ரீ கனகா துர்க்கா தேவி திருக்கோவிலில் நல்ல மழை பெய்ய வேண்டி சுதர்ஷன யாகம்

மற்றும் அம்மனுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது.

கோவில் நிர்வாகி சுஜதா ஆனந்த பத்மநாபா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு காங்கிரஸ் கட்சியின் மாவட்ட துணை தலைவர் சேகர் கிருஷ்ணவேணி ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்ட மகா சுதர்ஷன ஹோமம் யாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கலந்துக்கொண்டு வேத மந்திரங்கள் முழங்க பூஜைகள் நடந்தது.இந்த பூஜையின் முக்கியமாக உலக அமைதி வேண்டியும், உலக நன்மை, வேண்டியும், வெயிலின் கொடுமையில் இருந்து மக்களை காக்கும் வகையில் நல்ல மழை வேண்டி சிறப்பு யாகம் நடந்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து,

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் எடுத்து வந்து அம்மனை சாந்தப்படுத்தி நல்ல மழை பெய்து விவசாயம் செழித்திட வேண்டி பாலாபிஷேகம் செய்து வழிப்பட்டனர்,

இதனை அடுத்து ஶ்ரீ கனகா துர்கா தேவி அம்மனுக்கு சிறப்பு பூஜைகளும் அலங்கார தீபாரதனைகளும் நடைப்பெற்றது, இந்த சிறப்பு பூஜையில் பெங்களூரில் இருந்து மட்டுமின்றி கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து ஏராளமான மக்கள் கலந்துக் கொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிப்பட்டனர் பின்னர் பொதுமக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# பொதுமக்கள் உரிய வழிமுறைகளை பின்பற்றி கோடை வெயிலில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்

## கலெக்டர். இரா.பிருந்தாதேவி தகவல்

**சேலம்,ஏப்.25-**

கோடை வெயில் அதிகரித்துவரும் சூழ்நிலையில் வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் உரிய வழிமுறைகளை பின்பற்றி தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதுகுறித்து கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:

கோடை வெயில் அதிகரித்துவரும் சூழ்நிலையில் நம்மையும், நம் குடும்பத்தினரையும் வெயில் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அந்தவகையில், கோடை காலங்களில் அவசிய காரணங்கள் தவிர வெளியில் வருவதைத் தவிர்த்தல் வேண்டும். கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள அதிக அளவிலான நீர் பருக வேண்டும். தாகம் இல்லை என்றாலும் போதிய அளவிலான நீர் பருக வேண்டும். சூடான பானங்கள் பருகுவதைத் தவிர்க்கவும். அதிக அளவில் மோர், இளநீர், உப்பு மற்றும் மோர் கலந்த அரிசிக் கஞ்சி, உப்பு கலந்த எலுமிச்சை பழச்சாறு ஆகியவற்றைப் பருகலாம்.

குறிப்பாக, கோடை காலத்தில் குளிர்ந்த நீரால் குளிப்பது மிகுந்த நன்மையை அளிக்கும். மேலும், வியர்வை எளிதாக வெளியேறும் வகையில் மிருதுவான, தளர்ந்த, கற்றோட்டமான பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். திறந்த வெளியில் வேலை செய்யும் போது தலையில் பருத்தி துணி அல்லது துண்டு அணிந்து வேலை செய்ய வேண்டும். கடினமாக வேலை செய்யும் போது களைப்பாக இருந்தால் நிழலில் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

சூரிய வெப்பம் அதிகமாக உள்ள திறந்த வெளியில் வேலை செய்யும் போது களைப்பு, தலைவலி, தலைசுற்றல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால், உடனடியாக வெப்பம் குறைவாக உள்ள குளிர்ந்த இடத்திற்குச் செல்லலாம். மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடி வயிற்றில் வலி ஏற்பட்டால் அருகிலுள்ள நபரை உதவிக்கு அழைக்கலாம். மிகவும் சோர்வாகவோ, மயக்கமாகவோ இருந்தால் 108 ஆம்புலன்சை மருத்துவ உதவிக்கு அழைக்கலாம்.

மேலும், விவசாயிகள் தங்கள் கால்நடைகளை நிழற்பாங்கான இடங்களில் கட்டி வைத்து உரிய அளவில் நீர் மற்றும் பசுந்தீவனங்களைக் கொடுத்து பராமரித்திடவும், கோடை காலத்தில் கால்நடைகளைத் தாக்கும் நோய்கள் குறித்தும், முன் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் கால்நடைத் துறையினரால் தெரிவிக்கப்படும் வழிமுறைகளை கடைபிடித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. எனவே, பொதுமக்கள் உரிய வழிமுறைகளை பின்பற்றி கோடை வெயிலில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கு சீரான தங்கு தடையற்ற குடிநீர் வழங்க அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்

## கலெக்டர் ச.உமா அலுவலர்களுக்கு அறிவுரை



**நாமக்கல்,ஏப்.25-**

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் மருத்துவர் ச.உமா, தலைமையில் (24.04.2024) கோடை காலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுபாடின்றி விநியோகம் செய்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் மருத்துவர் ச.உமா, தெரிவித்ததாவது:

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 322 ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களுக்கு ஊராட்சியில் உள்ள சொந்த நீர் ஆதாரம் மற்றும் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வினியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஊராட்சிகளில் 78.59 எம்.எல்.டி குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளைச் சேர்ந்த 294 வார்டுகளில் வசிக்கும் பொது மக்களுக்கு தேவையான குடிநீர் கூட்டு குடிநீர் திட்ட மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு 13.64 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள 5 நகராட்சிகளைச் சேர்ந்த 153 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு நகராட்சி பகுதியில் உள்ள சொந்த நீர் ஆதார மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு 4.9 எம்.எல்.டி குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக வழங்கப்படும் குடிநீர் கடைகோடி குடியிருப்புகள் வரை சென்றடைவதை நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றை சேர்ந்த அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு உறுதி செய்திடவும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகள், வெடிப்புகள் மற்றும் மின்மோட்டாரில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்யும் பணிகளை போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், பாதுகாக்கப்பட்ட சீரான குடிநீர் தொய்வின்றி கிடைக்கவும் பணியாற்றிட வேண்டும். நாமக்கல் மாவட்டத்தில் கோடை காலத்தில் சீரான குடிநீர் விநியோகம் வழங்கப்படுவதை தினசரி உறுதி செய்திடும் வகையில், குடிநீர் தேவைகள் நிறைவேற்றிடும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர் பற்றாக்குறை ஏற்படா வண்ணம் சீரான அளவில் குடிநீர் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மின்சார வாரியத்தின் மூலம் கோடை காலத்திலும் மின் தடை இல்லாமல் வழங்க மின்வாரியம் மாற்று ஏற்பாட்டுடன் தயார் நிலையில் இருந்திட வேண்டும் என கலெக்டர் மருத்துவர் ச.உமா, தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், செயற்பொறியாளர் குமார், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ராம்மூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரவிச்சந்திரன், கோட்டப் பொறியாளர் திருகுணா, நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வெப்பம் அதிகரிப்பு எதிரொலி

# தருமபுரி மாவட்ட மக்களுக்கு கலெக்டர் கி.சாந்தி அறிவுரை

தருமபுரி,ஏப்.25

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் வெப்பம் அதிகரித்து காணப்படும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 23.4.2024 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ்நாட்டின் வட உள் மாவட்டங்களான வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், மாவட்டங்களில் 24.4.2024 ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும், அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும், வெயிலின் தாக்கத்தால் உடல்நலக் குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுகுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் கி. சாந்தி தெரிவித்துள்ளார்.

# சுவாமிமலையில் சித்திரை மாத பவுர்ணமி கிரிவலம்



**சாமிமலை,ஏப்.25-**

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி வழிபாட்டுக்குழு டிரஸ்ட் சார்பில் சித்திரை மாத பௌர்ணமி கிரிவலம் வல்லப கணபதி சன்னதியில் இருந்து துவங்கியது. மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் தலைமை வகித்தார். இந்த கிரிவலத்தில் சிவத் திருவருட்செம்மல் இறைநெறி இமயவன் வழிகாட்டுதலுடன் கூட்டு வழிபாடு மற்றும் கிரிவலமும் நடைபெற்றது. சுவாமிமலை திமுக பேரூர் கழக செயலாளர் பாலசுப்ரமணியன், முன்னாள் கவுன்சிலர் செழியன், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் குமாரவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி வழிபாட்டுக்குழு டிரஸ்ட் நிர்வாகி கேசவராஜன், மேனேஜிங் டிரஸ்டி சிவசங்கரன், செயலாளர் சேகர், பொருளாளர் சுவாமிநாதன் ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

கிரிவலத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு திருவிசநல்லூர் வாழைக்காய் கமிஷன் மண்டி மகாலிங்கம் குடும்பத்தினர் அமுது வழங்கினர்.

# குடந்தையில் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு செல்லும் பாதயாத்ரிகர்களுக்கு அன்னதானம்



**புதுக்கோட்டை,ஏப்.25-**

குடந்தையில், சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் சார்பில், வைத்தீஸ்வரன் கோயிலுக்கு செல்லும் பாதயாத்ரிகர்களுக்கு (21.04.2024) அன்னதானம் வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் தஞ்சாவூர், கந்தர்வகோட்டை, திருமயம், புதுக்கோட்டை, பொன்னமராவதி, திருப்பத்தூர் மற்றும் காரைக்குடி பகுதிகளிலிருந்து வைத்தீஸ்வரன் கோயிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு சாஸ்த்ரா சார்பில் உணவுப்பைகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டிற்கான அன்னதானத்தை, சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஆர். சேதுராமன் மற்றும் துணைவேந்தர் முனைவர் வைத்யசுப்ரமண்யம் அவர்களின் வழிகாட்டுதலின்படி திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறை புலத்தலைவர் முனைவர் சுவாமிநாதன் கலந்து கொண்டு உணவுப்பொட்டலங்களை வழங்கினார். மைசூர் பாக், பூரி, தயிர்சாதம் மற்றும் தண்ணீர் அடங்கிய 8000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. மாலை 4 மணியளவில் தொடங்கிய அன்னதானம் இரவு 9 மணி வரை நடைபெற்றது. கும்பகோணம் மாநகராட்சி மற்றும் காவல்துறையினரின் சிறப்பான ஒத்துழைப்போடு நிகழ்விற்கான ஏற்பாடுகளை சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக அலுவலர்கள், மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் பன்றிக்காய்ச்சல் நோய் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது

## கலெக்டர் க.கற்பகம் தகவல்

**பெரம்பலூர்,ஏப்.25-**

பெரம்பலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 2024-2025-ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டத்தின்கீழ் கால்நடை நலன் மற்றும் நோய் கட்டுப்பாட்டு திட்டம் மூலம் (LHDCP) பன்றிக் காய்ச்சல் நோய் தடுப்பூசிப் பணி தகுதிவாய்ந்த பன்றிகளுக்கு 24.04.2024 முதல் 30 நாட்களுக்கு தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்திற்கு 700 டோஸ் தடுப்பூசி மருந்துகள் பெறப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந் நோய் பெஸ்டி வைரஸ் கிருமியால் ஏற்படும் தொற்று நோயாகும் அதிக காய்ச்சல், தோல் புண்கள், வலிப்பு, மண்ணீரல் பாதிப்பு, பசியின்மை, மந்தத்தன்மை, பலவீனம், விழிவெண்படல அழற்சி, நோயுள்ள இடங்களில் பன்றிகள் வாங்குவதன் மூலம் இந் நோய் பரவுகிறது.

ஆகவே, பன்றிக்காய்ச்சல் நோய் தடுப்பூசி தடுப்பூசி அருகிலுள்ள அரசு கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் செலுத்தப்படவுள்ளது. பன்றி வளர்ப்போர் பன்றிகளுக்கு தடுப்பூசி செலுத்திக்கொள்ளுங்கள்

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# நஞ்சில்லா மூலிகை தோட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி: தொட்டபெட்டா அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது



ஊட்டி, ஏப்.25-
நஞ்சில்லா மூலிகை தோட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தொட்டபெட்டாவில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. இது குறித்த விவரமாவது-

மத்தியவனம் மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறையின் சார்பில் தேசிய பசுமை படை மாணவர்களுக்கு நம் வீட்டு தோட்டத்தில் இயற்கை விவசாயம், நஞ்சில்லா மூலிகை தோட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தொட்டபெட்டாவில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் பள்ளி மாணவர்களிடம் விடுமுறை நாட்களில் பயனுள்ள வகையில் விடுமுறை காலங்களை பயன்படுத்திக் கொள்ள வீட்டுத்தோட்டம் அமைக்க மூலிகை செடிகள் வழங்கப் பட் டது.பள்ளி தலைமை ஆசிரியர் தட்சிணாமூர்த்தி வரவேற்புரை பேசுகையில், ஆரோக்கியமான வாழ்விற்கு மாணவர்கள் இயற்கையோடு இணைந்து செயல்படுவது அவசியம். பறவைகள், விலங்குகள் இயற்கையுடன் இணைந்து வாழ்கின்றன. மனிதன் மட்டும் இயற்கையை விட்டு நீண்ட தூரம் தள்ளி வந்து விட்டான். மேலும் எல்லா விதத்திலும் இயற்கைக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துகிறான் என்றார்.


தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் சிவதாஸ் கூறுகையில், மாணவ -மாணவிகளாகிய நீங்கள் வீட்டுத் தோட்டத்தில் இயற்கை விவசாயம் செய்ய உங்கள் வீட்டில் இருப்பவர்களையும் வீட்டின் அருகில் இருப்பவர்களையும் வலியுறுத்த வேண்டும். பள்ளியில் மூலிகை தோட்டம் சிறப்புடன் செயல்பட ஒத்துழைப்பு தர வேண்டும். மூலிகை தோட்டம் ஏற்படுத்தியதில் அனுபவம் பெற்று அந்த அனுபவத்தை பயன்படுத்தி, பல்வேறு பள்ளிகளிலும் மூலிகை தோட்டம் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

மேலும் மாணவர்களுக்கு 30-க்கும் மேற்பட்ட மூலிகை தாவரங்கள் அவற்றின் மருத்துவ பயன்களை குறித்து விளக்கினார்.

இதைத்தொடர்ந்து பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சுற்றுசூழல் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு இயற்கை விவசாயம் முன்னெடுக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். முடிவில் ஆசிரியர் லிங்கேஸ்வரி நன்றி கூறினார்.



ஈரோடுநாடாளுமன்றதொகுதிதிமுகவேட்பாளர்கே.இ.பிரகாஷ்அமைச்சர்கள்துரைமுருகன், சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், மதிவேந்தன், ராஜ்யசபா எம்பி அந்தியூர் செல்வராஜ் மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஆகியோருடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



நீலகிரி மாவட்டம் ஊட்டி பாலிடெக்னிக் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நீலகிரி தொகுதியில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிப்பு கேமராக்களின் வாயிலாக மாவட்ட தேர்தல் அலுவலர் மு.அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு பஸ் ஸ்டாண்டில் நடைபாதை ஆக்கிரமிப்புகள்: மாநகராட்சி அதிகாரிகள் அகற்றினர்



ஈரோடு ஏப்.25-
ஈரோடு மாநகராட்சி மத்திய பஸ் ஸ்டாண்ட் வளாகத்தற்குள் ஏராளமான கடைகள் செயல்பட்டு வருகின்றது. கடை உரிமையாளர்கள் கடையை தாண்டி பயணிகள் நடந்து செல்லும் நடைபாதை வரை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்து வியாபாரம் செய்து வருவதால் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் நடைபாதையில் நடந்து செல்ல முடியாமல் பஸ்கள் நிற்கும் ரேக்குகள் வழியாக செல்ல வேண்டிய சூழல் இருந்து வருகின்றது. இது தொடர்பாக ஈரோடு மாநகராட்சி நிர்வாகத்திற்கு தொடர்ந்து புகார்கள் சென்றதையடுத்து மாநகராட்சி கமிஷனர் சிவகிருஷ்ணமூர்த்தி நடைபாதை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இதையடுத்து நேற்று காலை மாநகராட்சி அதிகாரிகள் பஸ் ஸ்டாண்டு வளாகத்திற்குள் சென்று நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பொருட்கள், ரேக்குகள் உள்ளிட்டவைகளை அகற்றி குப்பை லாரிகளில் ஏற்றி கொண்டு சென்றனர்.

# இருப்பு வைத்துள்ள விதைகளை பரிசோதனை செய்ய வேண்டும்: பரிசோதனை அலுவலர் தகவல்

ஊட்டி, ஏப்.25-
தென்மேற்கு பருவமழை காலத்திற்காக இருப்பு வைத்துள்ள விதைகளை நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் பரிசோதனை செய்ய வேண்டும் என்று விதை பரிசோதனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் தென்மேற்கு பருவ மழை பெய்யும். அப்போது மழை காய்கறிகள் சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டுவார்கள்.

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை காலத்திற்காக விதைகளை இருப்பு வைத்துள்ள நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் ஊட்டி ரோஜா பூங்காவில் உள்ள தோட்டக்கலை துறை இணை இயக்குனர் அலுவலகத்தில் விதை பரிசோதனை செய்து கொள்ள விதை பரிசோதனை அலுவலர் நவீன் அறிவுறுத்தியுள்ளார்.இதுகுறித்து அவர் வெளியட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

நீலகிரி மாவட்டம் ஊட்டி ரோஜா பூங்காவில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில், நீலகிரி மாவட்ட விவசாயிகள் பணிவிதை மாதிரியை கொடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்ளல்லாம்.இந்த நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு விதை மாதிரிக்கு ரூ. 80- மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம். விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான விதை மாதிரியாக, கேரட், காலிப்ளவர் மற்றும் முட்டைகோஸ் 10 கிராம், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி 50 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 25 கிராம், ப்ரொக்கோலி, நூல்கோல் மற்றும் டர்நீப் 10 கிராம் ஆகும்.இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்து கொள்ளலாம். மேலும் தரமான விதையின் மூலம் சாகுபடி அதிகரிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# மழை பெய்ய வேண்டி ஈரோடு காவிரி ஆற்றில் இறங்கி சிவாச்சாரியார்கள் சிறப்பு வழிபாடு



ஈரோடு, ஏப். 25 -
மழை பெய்து வெப்பம் தணிவதற்காகவும், கோடையில் குடிநீர் தட்டுப்பாடு நீங்கவும், விவசாயிகள் நலன் காக்கவும், நாடு செழிக்கவும் சித்ரா பவுர்ணமியை ஒட்டி ஈரோடு கருங்கல்பாளையம் காவேரிக்கரையில் சிவாச்சாரியார்கள் வருண பகவானுக்கு சிறப்பு வழிபாடு நடத்தினர்.

இதில் 21 சிவாச்சாரியார்கள் காவிரிக்கரை படித்துறையில் அமர்ந்து சிறப்பு பூஜை நடத்தினர். அப்போது வர்ண பகவானை வேண்டி மந்திரங்கள் சொல்லப்பட்டன.

அதன்பிறகு காவிரி ஆற்றில் 21 சிவாச்சாரியார்களும் இறங்கி வழிபாட்டை தொடர்ந்தனர். சுமார் ஒரு மணி நேரம் ஆற்றில் நின்றபடி சிவாச்சாரியார்கள் மந்திரம் கூறினர்.

இதில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# கோடை வெயிலின் வெப்பத்தாக்க தடுப்பு பாதுகாப்பு வழிமுறைகள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தகவல்

ஈரோடு.ஏப்.25-
தமிழ்ட்டில் தற்போது கோடை வெப்ப அலைகளினால் வெப்ப தாக்கம் அதிகமாக உள்ளது. குறிப்பாக நமது ஈரோடு மாவட்டத்தில் வெப்ப நிலையின் அளவு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திலும் தமிழ்நாட்டில் முதலிடமும் வகிக்கிறது. மனித உடலின் சராசரி வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ் ஆகும். சுற்றுப்புற சூழல் வெப்பநிலை அதிகமாகும் போது அதிகமான வியர்வை வழியாக உப்பு மற்றும் நீர்ச்சத்து அதிகமாக வெளியேறுகிறது.

கோடை வெப்ப தாக்கத்தினால் அதிக தாகம், தலை சுற்றல், கடுமையான தலைவலி, தசைப் பிடிப்பு, உடல் சோர்வடைதல், சிறுநீர் மஞ்சள் நிறத்தில் குறைந்த அளவு வெளியேறுதல், மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

வெப்பத்தாக்க அதிர்ச்சி ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. வெப்ப தாக்க அதிர்ச்சியானது பச்சிளம் குழந்தைகள், சிறுவர் சிறுமியர்கள், வயதானவர்கள், கர்ப்பிணிகள் இணை நோய் உள்ளவர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. கோடை வெப்ப தாக்க பாதிப்புகளை தடுக்க காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலில் நடமாடுவதை தவிர்க்கவும். நடமாட வேண்டிய கட்டாயம் ஏற்படின் குடையைக் கொண்டு அல்லது தலையில் துண்டை கட்டிக் கொண்டோ நடமாடவும்.
வெப்பத்தினால் ஏற்படும் நீர் இழப்பை தடுக்க தண்ணீர், உப்பு கலந்த மோர், உப்பு மோர் கலந்த அரிசி கஞ்சி, இளநீர், பழச்சாறுகள், ORS சர்க்கரை உப்பு கரைசல் திரவம் ஆகியவற்றை பருகலாம். தாகம் இல்லாவிடினும் தண்ணீரை அதிகமாக பருக வேண்டும். மேலும் பருவ கால பழங்களான தர்பூசணி, முலாம்பழம் மற்றும் வெள்ளரி, நுங்கு ஆகியவற்றை உணவாக எடுத்துக் கொள்ளலாம். வீட் டில் சமைத்த உணவுகளை உண்ண வேண்டும். புகைபிடித்தல், மது, செயற்கை பானங்கள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
மெலிந்த வெளிர் நிறமுள்ள தளர்ந்த பருத்தி ஆடைகளை அணிவதன் மூலம் உடல் வெப்பத்தை குறைக்கலாம். வெயில் படும் ஜன்னல்களில் திரைச்சீலைகளை கட்டுவதன் மூலம் அறையின் வெப்பத்தை குறைக்கலாம்.
சாலையில் நடந்து செல்லும் பொழுது வெப்ப தாக்க அதிர்ச்சி ஏற்பட்டவர்க்கு முதலுதவி சிகிச்சையாக அந்த நபரை குளிர்ந்த காற்றோட்டமான நிழலான பகுதியில் ஒரு பக்கமாக ஒருக்களித்து படுக்க வைக்க வேண்டும். பின்பு அவருக்கு குடிப்பதற்கு பழச்சாறு அல்லது ஓஆர்எஸ் திரவம் அல்லது தண்ணீரை கொடுக்க வேண்டும்.

உடல் வெப்பத்தை குறைப்பதற்கு குளிந்த தண்ணீரால் உடல் முழுவதும் தெளித்து விட வேண்டும். அல்லது துணியை தண்ணீரில் நனைத்து உடல் முழுவதும் துடைத்து விட வேண்டும். பின்பு 108 அவசர ஊர்திக்கு அழைப்பு விடுத்து உடனடியாக அவரை அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனைக்கு மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பி வைத்திடல் வேண்டும். கார்களை உபயோகிப்பவர்கள் தயவு செய்து உங்கள் குழந்தைகளையோ அல்லது செல்ல பிராணிகளையோ வெயிலில் காருக்குள் தனியாக வைத்திருக்க வேண்டாம். கடுமையான வெயிலில் உடல் வெப்பமடையும் பொழுது ஐஸ் வாட்டர் போன்ற மிக குளிர்ந்த பானங்களை தவிர்க்க வேண்டும்.
கோடை காலத்தில் பரவும் நோய்களான அம்மை, தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி மற்றும் வெயில் கொப்பளங்களுக்கு அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டு மருத்துவரின் ஆலோசனைப்படி தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே ஈரோடு மாவட்ட பொதுமக்கள் மேற் கண்ட கோடை வெயிலின் வெப்ப தாக்க பாதுகாப்பு வழிமுறைகளை கையாண்டு தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் நாளை நாடாளுமன்ற தேர்தல்

# நீலகிரியில் பணிபுரியும் கர்நாடக மாநில தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை அளிக்க அறிவுறுத்தல்

ஊட்டி, ஏப்.25-
கர்நாடகாவில் நாளை நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவீத வாக்களிக்கும் வகையில், நீலகிரியில் பணிபுரியும் கர்நாடக மாநில தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து குன்னூர் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) முருகேசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

கர்நாடக மாநிலத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) மற்றும் மே 7-ந் தேதி ஆகிய நாட்களில் நாடாளுமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளது.

இதையொட்டி மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 135 (பி)ன் படி கர்நாடக மாநில தேர்தல் நாளன்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள கர்நாடகா மாநில வாக்குரிமை பெற்ற தொழிலாளர்கள் பணிபுரியும் கடைகள், நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், அனைத்து இதர நிறுவனங்களிலும் பணிபுரியும் நிரந்தரம், தினக்கூலி, தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து கர்நாடகா மாநில வாக்குரிமை பெற்ற தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என் தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலாளரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இதன்படி கர்நாடகா மாநில மக்களவை பொதுத் தேர்தல், இடைத்தேர்தல் நடைபெறும் பகுதிகளை சேர்ந்த தொழிலாளர்கள் 100 சதவீதம் வாக்களிக்கும் வகையில் நாளை (வெள்ளிக்கிழமை) மற்றும் மே 7-ந் தேதி அன்று நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் கர்நாடக மாநில தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுப்பு அளிக்க வேண்டும்.

இதுதொடர்பாக தொழிலாளர் துறை சார்பில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு உள்ளது. விடுப்பு தொடர்பாக ஏதேனும் புகார் இருப்பின் 9443566160 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில்

# முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் அருணா தகவல்

ஊட்டி, ஏப்.25-
ரூ.1 லட்சம் ரொக்கத்துடன் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற 5 வருடங்கள் தமிழகத்தில் இருந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீலகிரி மாவட்ட கலெக்டர் மு.அருணா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, 'முதலமைச்சர் மாநில இளைஞர் விருது' ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ. 1,00,000- ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2024 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம், ஏப்ரல் 1, 2023 (01.04.2023) அன்று 15 வயது நிரம்பியவாரகவும், மார்ச் 31, 2024 (31.03.2024) அன்று 35 வயதுக்குள்ளாகவும் இருத்தல் வேண்டும். . கடந்த நிதியாண்டில் (2023 - 2024) அதாவது 01.04.2023 முதல் 31.03.2024 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்)

விண்ணப்பதார்ர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத் திய மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் பள்ளிகளில் பணியாற்றுபவர்கள்இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது.

விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும். வரும் 1-ந் தேதி முதல் இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி நாள் 31.05.2024 அன்று மாலை 4.00 மணி ஆகும். விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளம் உள்ளது. ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
இத்தகவலை நீலகிரி மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

# வெயிலின் தாக்கத்தால் உடல்நலக்குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்

## நீலகிரி கலெக்டர் மு.அருணா அறிவுரை

ஊட்டி, ஏப்.25-
வெயிலின் தாக்கத்தால் உடல்நலக்குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுகுமாறு நீலகிரி மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

தமிழ்நாட்டில் கடந்த சிலநாட்களாக பல்வேறு மாவட்டங்களில் வெப்பம் அதிகரித்து காணப்படும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 23.4.2024 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ்நாட்டின் வட உள் மாவட்டங்களான வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், மாவட்டங்களில் 24.4.2024 மற்றும் 25.4.2024 ஆகிய நாட்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலைவீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது நீலகிரி மாவட்டத்திலும் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும், அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும், வெயிலின் தாக்கத்தால் உடல்நலக் குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுகுமாறும் மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார்.



செங்கோட்டை அருகே உள்ள பிரானூர் ஸ்ரீ தேவி அரசுர்நங்கை முப்புடாதி அம்மன் வடகுத்தி அம்மன் கோவில் கொடை விழா சித்ரா பௌர்ணமி அன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட இரவு சப்பரத்தில் அம்மன் வீதி உலா நடைபெற்றது.

# செங்கோட்டை எஸ்.எம்.எஸ்.எஸ்.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஹாக்கி அணி தொடக்க விழா

செங்கோட்டை,ஏப்.25-
செங்கோட்டை எஸ் எம் எஸ் எஸ் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஹாக்கி அணி தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்விற்கு வந்திருந்த அனைவரையும் உடற்கல்வி இயக்குனர் சஞ்சய்காந்தி வரவேற்றுப் பேசினார். தலைமை ஆசிரியர் சுந்தரகுமார், உதவித் தலைமை ஆசிரியர் ஜோதிலட்சுமி , ஆசிரியர் ஸ்டாலின் ஜவகர் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவரும் ஆஸ்திரேலியாவில் கணினிப் பொறியாளராகப் பணியாற்றும் அருண் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஹாக்கி அணி வீரர்கள் 20 பேருக்கு ஹாக்கி மட்டைகள் மற்றும் காலணிகளை அன்பளிப்பாக வழங்கினார்.

பாரத்கண்ணா மெட்ரிக் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் ரமேஷ்கண்ணா பயிற்சியாளராகக் கலந்துகொண்டு ஹாக்கி அணி வீரர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.நிறைவாக உடற்கல்வி ஆசிரியர் ராமசாமி நன்றி கூறினார்.

